DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.126/2015

PROSECUTION WITNESS L.W.10/P.W.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆதிகேசவன் | தகப்பனார் பெயர் | சீனிவாசன் |
| கிராமம் | | ஊர் | |
| தொழில் | உதவி ஆய்வாளர் (ஓய்வு) | வயது | |

**1,2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 04.11.2025.

**முதல் விசாரணை**

1) நான் ஈரோடு நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன்.

2) கடந்த 2014 ம் ஆண்டு தாலுக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது 09.01.2014 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது, வெண்ணிலா, த/பெ. ராஜகோபால் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று குற்ற எண்.16/2014 சட்டபிரிவு 457, 380 இதசவில் வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) அன்றைய தினம் 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன், பால மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.(**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

3) வழக்கு சாட்சிகள் வெண்ணிலா, ராஜகோபால், கண்ணம்மாள், அய்யப்பன், சரவணன், பாலமணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடி சென்றபோது ஆணைக்கல்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே இரகசிய தகவலாளி அடையாளம் காட்ட நபரை பிடித்து விசாரித்ததில் தனது பெயர் செல்வம் (எ) செல்லதுரை, வயது 25, த/பெ. செல்லமுத்து, பெண்ணகரம், என முன்னுக்கு பின் முரணாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை 12.15 மணிக்கு கைது செய்து, சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சரவணன், பால மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.7000/- த்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும்

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.11.04 18:33:46 +0530

மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், 14.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி செல்வம் (எ) செல்லதுரையை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். **(பணம் ரூ.7000/– த்தை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பின்னர் 10.01.2014 ம் தேதி தகவலாளி கொடுத்த தகவலின்பேரில் முள்ளாம்பரப்பு பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த சந்தேகத்திற்குரிய நபரை பிடித்து விசாரித்தரில் முன்னுக்கு பின் முரணாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்ட ஆனந்தன், வயது 24, த/பெ.ராமசாமி, ஆணைக்கல்பாளையம் என்பவரை 9.00 மணிக்கு கைது செய்து அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 9.15 –10.00 மணிக்கு சாட்சிகள் பிரபு, தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.500/– மற்றும், ஒரு அரைஞாண் கொடி, ஒரு கவரிங் செயின் ஆகியவற்றை மகஜரில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி, 12.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி ஆனந்தனை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். **(பணம் ரூ.500/– ஐ கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **( படிவம் 91 முறையே அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) 2 வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் நாடார் மேடு அக்ஷயா ஜூவல்லரியில் தங்க நகையை அடமானம் வைக்க கடை உரிமையாளர் விஷ்ணுபிரகாசை உரசி பார்த்து, கவரிங் என கூறியதன் பேரில் 18.01.2014 ம் தேதி கடை உரிமையாளர் விஷ்ணுபிரகாசை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதியின் புகாரில் தங்க நகை என கொடுத்தது சம்மந்தமாக விசாரிக்க அக்கம் பக்கத்தினர் சொன்னதின் பேரில் தவறாக வாக்குமூலம் கொடுத்துவிட்டதாக கூறியதை மறு வாக்குமூலமாக பதிவு செய்தேன். பின்னர் 27.09.2014 ம் தேதி, எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 3 நாட்கள் கழித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எத்தனை நாட்கள் கழித்து வழக்கு சொத்துக்கள் கவரிங் நகைகள் என தெரிந்து கொண்டேன் என்றால் 9 நாட்கள் கழித்து தெரிந்து கொண்டேன். சாட்சிகள் சரவணன், பாலமணிகண்டன், கண்ணம்மாள், தங்கராஜ், அய்யப்பன் ஆகியோர்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் மேற்படி நபர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என சாட்சியமளித்துள்ளனர் என்றால் சாட்சியளித்துள்ளார்கள்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.04 18:33:54 +0530

ஆனால் அது சரியல்ல. அ.சா.1 முதல் வரை அ.சா.7 வரையிலான சாட்சிகள் அனைவரும் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி – 9 ஆக நான் குறிப்பிட்டுள்ள நபர் பெயர் விஷ்ணுபிரகாஷ். ஆனால் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது அவரது பெயர் விஷ்வபிரகாஷ் என கூறியுள்ளார் என்றால் விஷ்ணு பிரகாஷ் என்பது தான் சரி. நான் இவ்வழக்கில் சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாக சொன்ன விவரங்கள் சரியல்ல என்றாலும், அதில் சொல்லியுள்ள விவரங்கள் சாட்சிகளுக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் தான் இவ்வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சியாகியுள்ளனர் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதி, நேரம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.11.04 18:34:06 +0530

Judicial Magistrate No.I,

Erode.